# கற்கண்டு கணிதம் (karkandukanitham.in)

## NMMS மாதிரி வினாத்தாள் - 8th Science (அலகு 16 - Part 2)

பாடம்: நுண்ணுயிரிகள் (பயன்கள் மற்றும் நோய்கள்)

📚 **NMMS தேர்வுக்குச் சிறந்த வழிகாட்டி (SAT Maths)!**
கற்கண்டு கணிதம் Aptitude Book அமேசானில் கிடைக்கிறது: *https://www.amazon.in/dp/B07V5Y7WCG* (One-time Payment | Life-time Access)
📲 **WhatsApp Channel:** *https://whatsapp.com/channel/0029VaoGbmsGOj9fZSxi4S0Z*

**1. வளிமண்டல நைட்ரஜனை மண்ணில் நிலைநிறுத்தி மண்ணை வளப்படுத்தும் நுண்ணுயிரிகள் எவை?**

a) ஈஸ்ட்
b) ரைசோபியம் & சயனோபாக்டீரியா
c) லாக்டோபேசில்லஸ்
d) அமீபா

**2. தாவர வேர்களுக்குப் பாதுகாப்பளித்து, தாவர நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்தும் பூஞ்சை எது?**

a) டிரைக்கோடெர்மா
b) ரைசோபியம்
c) பெனிசிலியம்
d) ஈஸ்ட்

**3. பருத்திச் செடிகளில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உயிரி-கட்டுப்பாட்டுக் காரணியாகப் பயன்படும் பாக்டீரியா எது?**

a) டிரைக்கோடெர்மா
b) பேசில்லஸ் துரிஞ்சியன்ஸிஸ் (Bt)
c) சூடோமோனாஸ்
d) மெத்தனோஜென்கள்

**4. கழிவுநீர் சுத்திகரிப்பில் மீத்தேன் (உயிரி வாயு) வாயுவை உற்பத்தி செய்யும் பாக்டீரியாக்கள் எவை?**

a) லாக்டோபேசில்லஸ்
b) சயனோபாக்டீரியா
c) மெத்தனோஜென்கள்
d) ரைசோபியம்

**5. ரொட்டி மற்றும் கேக் தயாரிப்பில் மாவை மிருதுவாக்கப் பயன்படும் நுண்ணுயிரி எது?**

a) பாக்டீரியா
b) வைரஸ்
c) ஈஸ்ட்
d) ஆல்கா

**6. ஆல்கஹால் பானங்கள் மற்றும் திராட்சை ரசம் எதன் உதவியால் நொதித்தல் முறையில் தயாரிக்கப்படுகின்றன?**

a) லாக்டோபேசில்லஸ்
b) ஈஸ்ட்
c) பெனிசிலியம்
d) அமீபா

**7. சணல் தாவரங்களைக் கட்டுகளாகக் கட்டி நீரில் வைக்கும்போது நார்களைத் தனித்துப் பிரிக்கும் 'மிருதுவாக்குதல்' செயலுக்கு உதவும் பாக்டீரியா எது?**

a) சூடோமோனாஸ் ஏருஜினோஸா
b) எ.கோலை
c) பேசில்லஸ் ஆந்த்ராசிஸ்
d) விப்ரியோ காலரா

**8. பாலில் உள்ள லாக்டோஸை லாக்டிக் அமிலமாக மாற்றி தயிராக மாற்றும் பாக்டீரியா எது?**

a) எ.கோலை
b) லாக்டோபேசில்லஸ்
c) மெத்தனோஜென்கள்
d) ரைசோபியம்

**9. மனிதனின் குடலில் வாழ்ந்து உணவு செரிமானத்திற்கு உதவும் பாக்டீரியா எது?**

a) விப்ரியோ காலரா
b) சூடோமோனாஸ்
c) லாக்டோபேசில்லஸ் அசிடோபிலஸ்
d) பேசில்லஸ் துரிஞ்சியன்ஸிஸ்

**10. மனித குடலில் வைட்டமின் K மற்றும் வைட்டமின் B-கூட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் பாக்டீரியா எது?**

a) எ.கோலை (E.coli)
b) லாக்டோபேசில்லஸ்
c) ஈஸ்ட்
d) சயனோபாக்டீரியா

**11. திரவ நிலையில் உள்ள உணவுகளைப் பாதுகாக்கும் 'பதப்படுத்துதல்' (Pasteurization) முறையைக் கண்டறிந்தவர் யார்?**

a) எட்வர்ட் ஜென்னர்
b) லூயிஸ் பாஸ்டர் (1862)
c) அலெக்ஸாண்டர் பிளெமிங்
d) ராபர்ட் கோச்

**12. பதப்படுத்துதல் முறையில் பால் எந்த வெப்பநிலைக்கு சூடுபடுத்தப்பட்டுப் பின் குளிரவைக்கப்படுகிறது?**

a) 100°C
b) 50°C
c) 70°C
d) 30°C

**13. தயிர் மற்றும் பிற பால் பொருட்களில் சேர்க்கப்படும் நன்மையைச் செய்யும் உயிருள்ள உணவுப் பொருள்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

a) புரோபயாடிக்குகள் (Probiotics)
b) ஆண்டிபயாடிக்குகள்
c) வைட்டமின்கள்
d) தடுப்பூசிகள்

**14. தாவரங்களுக்கு ஏற்படும் 'சிட்ரஸ் கேன்கர்' என்ற நோய் எதனால் உருவாகிறது?**

a) பைட்டோப்தோரா இன்பெஸ்டன்ஸ்
b) சாந்தோமோனாஸ் ஆக்சனோபோடிஸ்
c) ஆப்தோவைரஸ்
d) பேசில்லஸ்

**15. உருளைக்கிழங்கு பிளைட் நோயை உருவாக்கும் நுண்ணுயிரி எது?**

a) வைரஸ்
b) பாக்டீரியா
c) பைட்டோப்தோரா இன்பெஸ்டன்ஸ் (பூஞ்சை)
d) புரோட்டோசோவா

**16. கால்நடைகளுக்கு ஏற்படும் 'ஆந்த்ராக்ஸ்' நோய் எதனால் உருவாகிறது?**

a) பேசில்லஸ் ஆந்த்ராசிஸ் (பாக்டீரியா)
b) ஆப்தோவைரஸ்
c) பிளாஸ்மோடியம்
d) எண்டமீபா

**17. கால்நடைகளைத் தாக்கும் 'வாய் மற்றும் கால் குளம்பு நோய்' எதனால் ஏற்படுகிறது?**

a) பாக்டீரியா
b) பூஞ்சை
c) ஆப்தோவைரஸ்
d) புரோட்டோசோவா

**18. மனிதர்களுக்கு ஏற்படும் 'காசநோய்' (Tuberculosis) எந்த பாக்டீரியாவால் பரவுகிறது?**

a) விப்ரியோ காலரா
b) மைக்கோபாக்டீரியம் டியூபர்குளோசிஸ்
c) ராப்டோ விரிடி
d) எண்டமீபா

**19. நீர்த்த வயிற்றுப்போக்கினை ஏற்படுத்தும் காலரா நோயை உருவாக்கும் பாக்டீரியா எது?**

a) விப்ரியோ காலரா
b) மைக்கோபாக்டீரியம்
c) பேசில்லஸ்
d) சூடோமோனாஸ்

**20. சாதாரண சளி எந்த வைரஸால் பரவுகிறது?**

a) ஆப்தோவைரஸ்
b) இன்புளூயன்சா
c) ராப்டோ விரிடி
d) பிளாஸ்மோடியம்

**21. விலங்குகள் கடிப்பதனால் பரவும் ரேபிஸ் (வெறிநாய்க்கடி) நோயை உருவாக்கும் வைரஸ் எது?**

a) ஆப்தோவைரஸ்
b) இன்புளூயன்சா
c) ராப்டோ விரிடி
d) கொரோனா

**22. கடுமையான வயிற்றுப்போக்கினை ஏற்படுத்தும் அமீபிக் சீதபேதி நோயை உருவாக்கும் புரோட்டோசோவா எது?**

a) பிளாஸ்மோடியம்
b) எண்டமீபா ஹிஸ்டாலைடிகா
c) ஈஸ்ட்
d) ரைசோபியம்

**23. மலேரியா நோயை உருவாக்கும் நுண்ணுயிரி எது?**

a) பாக்டீரியா
b) வைரஸ்
c) பிளாஸ்மோடியம் (புரோட்டோசோவா)
d) பூஞ்சை

**24. மலேரியா நோய் எந்த கொசுவினால் பரவுகிறது?**

a) ஆண் அனோபிலஸ் கொசு
b) பெண் அனோபிலஸ் கொசு
c) ஏடிஸ் கொசு
d) கியூலெக்ஸ் கொசு

**25. நுண்ணுயிரிகள் எந்த அலகால் அளவிடப்படுகின்றன?**

a) செ.மீ
b) மி.மீ
c) மைக்ரான்
d) மீட்டர்

**26. குரூ (Kuru) என்ற நோயை உருவாக்கும் காரணி எது?**

a) பாக்டீரியா
b) வைரஸ்
c) பிரியான்
d) பூஞ்சை

## விடைகள் (Answer Key)

| | |
|---|---|
| **Q. 1 - 10** | 1.b, 2.a, 3.b, 4.c, 5.c, 6.b, 7.a, 8.b, 9.c, 10.a |
| **Q. 11 - 20** | 11.b, 12.c, 13.a, 14.b, 15.c, 16.a, 17.c, 18.b, 19.a, 20.b |
| **Q. 21 - 26** | 21.c, 22.b, 23.c, 24.b, 25.c, 26.c |